செ.வெ.எண்: 519 நாள்: 16.09.2021

**புதுக்கோட்டை மாவட்டம்**

**பொன்னமராவதி பேருந்து நிலையத்தில் புதிய பேருந்து வழித்தடங்களை**

**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேருந்துநிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் புதிய பேருந்து வழித்தடங்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் இன்று (16.09.2021) துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு வழித்தடங்களில் பேருந்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் பொன்னமராவதி பேருந்து நிலையத்திலிருந்து பல்வேறு வழித்தடங்களில் பேருந்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி P1C24 (31) வழித்தடத்தில் பேருந்து புதுக்கோட்டையில் இருந்து பனையப்பட்டி வழியாக திருவப்பூர், பளுவஞ்சி, குமரமலை, சித்தூர், கூடலூர் வரை 2 நடைகளும், P2C27 (9A) வழித்தடத்தில் பேருந்து பொன்னமராவதியில் இருந்து மேலத்தானியம் வழியாக கொன்னையூர், ஆலவயல், நகரப்பட்டி, பாலக்குறிச்சி, முள்ளிப்பட்டி வரை 4 நடைகளும், PON02 வழித்தடத்தில் பேருந்து புதுக்கோட்டையில் இருந்து கண்ணங்காரக்குடி வழியாக கடையக்குடி, ராயவரம், கானாப்பேட்டை, பனங்குடி வரை 6 நடைகளும் தினமும் இயக்கப்பட உள்ளது. இதனால் இப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக அரசு பொறுப்பேற்ற 4 மாதத்திற்குள் புதுக்கோட்டை மாவட்டத்தில் 20 பேருந்து வழித்தடங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் 18 பேருந்துகள் முழுவதுமாக திருமயம் சட்டமன்ற தொகுதியில் உள்ள ஊர்களுக்கு இயக்கப்பட்டு வருகிறது. அரசு பேருந்துகள் லாபத்தை கணக்கிடாமல், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இயக்கப்பட்டு வருகிறது. இதனால் குக்கிராமங்கள்தோறும் பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணம் செய்யலாம். இதனை மகளிர் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் பொதுமக்களிடமிருந்து பல்வேறு பகுதிகளில் பேருந்துகள் இயக்க கோரிக்கை வரப்பெற்றுள்ளது. பொதுமக்களின் கோரிக்கைகேற்ப பேருந்து வசதிகள் ஏற்படுத்தவும், புதிய வழித்தடங்களில் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர் இளங்கோவன், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.சுதாஅடைக்கலமணி, வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி மற்றும் அழகப்பன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**